**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.I, PERAMBALUR.**

**CC.No.205/2017** **Date :11/05/2023**

**PW4(சண்முகம் த/பெ.ராசு ) குறுக்கு விசாரணை தொடர்ச்சி :** சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

**(எதிரி ஆஜர் )**

21. காசோலை எண்.768186 மூலம் ரூ.25,000/-யை 30.01.2003 அன்று லப்பைக்குடிக்காடு திருச்சி மத்திய கூட்டுறவு வங்கியின் கிளை மூலமாக பெற்றுள்ளதாக இந்த வழக்கில் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். அந்த தொகையை 21.03.2003 ரசீது எண்.2068 ன் படி வட்டியுடன் வங்கியில் திருப்பி செலுத்தியதாக இறுதி அறிக்கையில் கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். இதை உறுதிப்படுத்த திருச்சி மத்திய கூட்டுறவு வங்கியினரை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நான் எதிரிக்கு எதிராக தாக்கல் செய்த மற்றொரு வழக்கில் அதாவது CC.203/2017 என்ற வழக்கில் இதே காசோலை எண்.768186 மூலமாக ரூ.20,000/- எடுக்கப்பட்டதாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. சாட்சி தானாக இந்த வழக்கில் இறுதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள காசோலை எண்ணை தவறுதலாக 768188 என்பதற்கு பதிலாக 768186 என தட்டச்சு பிழை ஏற்பட்டுள்ளதாக கூறுகிறார். இந்த வழக்குகளில் சாட்சிகள் கூறிய வாக்குமூலத்தில் என்ன காசோலை எண்ணை சாட்சிகள் கூறியுள்ளனர் என என்னால் குறிப்பிட்டு கூறமுடியாது என்றால் சரியல்ல. எந்த சாட்சி அவ்வாறு கூறியுள்ளார் என்றால் சாட்சிகள் கூறவில்லை. ஆனால், ஆவணங்களில் உள்ளது. இறுதி அறிக்கை தாக்கல் செய்வதற்கு முன்னர்

அனைத்து ஆவணங்களையும் சரிபார்த்து நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். தட்டச்சு பிழை என நான் கூறும் இந்த சங்கதிக்கு இந்த வழக்கில் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட பின்பு இன்று வரை அதை சரி செய்ய நான் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். நான் முறையாக சாட்சிகளை விசாரிக்கமலும் ஆவணங்களை சரியாக பரிசீலனை செய்யாமலும் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளதால் தான் இத்தகைய தவறு ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 21.03.2003 அன்று தான் இந்த காசோலை பணமாக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். இதனால் இந்த வங்கிக்கு எந்த வித இழப்பும் ஏற்படவில்லை என்றாலும் நான் சாட்சிகளை சரியாக விசாரணை செய்யாமல் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

22. இந்த வங்கியில் எதிரியை தவிர எத்தனை ஊழியர்கள் பணி புரிந்தார்கள் என எனது விசாரணையில் நான் தெரிந்து கொண்டேன். அந்த ஊழியர்களின் நான் விசாரித்து வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். நான் முறைகேடு நடந்ததாக கூறப்படும் காலகட்டத்தில் வங்கியில் நிர்வாக குழு செயல்பட்டுக் கொண்டிருந்தது என்றாலும் ஆனால் அவர்களை நான் விசாரணை செய்து வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை என்றாலும் சரிதான். இந்த விசாரணையின் போது பணியாற்றிய தனி அதிகாரியையும் நான் விசாரித்து வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். எதிரியையும் நான் விசாரித்து வாக்கு மூலம் எதுவும் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். விசாரணை அதிகாரி விசாரித்ததாக கூறப்படும் போது எதிரியின் முன்னிலையில் சாட்சிகள் விசாரிக்கப்பட்டார்களா என நான் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். எதிரியின் முன்னிலையில் தான் சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். விசாரணை அதிகாரி இராமலிங்கம் என்னிடம்

கொடுத்த வாக்குமூலத்தில் எதிரிகளின் முன்னிலையில் சாட்சிகளை விசாரித்ததாக கூறியுள்ளாரா என்றால் இல்லை. அதைத் தவிர அலுவலகம் சாராத சாட்சிகள் யாரும் அவர்கள் கொடுத்த வாக்குமூலத்தில் எதிரிகளின் முன்னிலையில் அவர்கள் விசாரிக்கப்பட்டார்களா என கூறியுள்ளார்களா என்றால் இல்லை. இந்த வழக்கிற்கான விசாரணை அதிகாரி விசாரணை அறிக்கையை தாக்கல் செய்வதற்கான காலதாமதத்திற்கான காரணத்தை அவரது வாக்குமூலத்தில் கூறவில்லை. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றாலும் நான் சாட்சிகளை முறையாக சரிவர விசாரிக்காமல் ஆவணங்களை சரிவர பரிசீலிக்காமல் எதிரியின் மீது தவறான இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

Taken down by / before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused/ pleader and admitted by the witness to be correct.

Judicial Magistrate No.I,
Perambalur.

LAWS Digital